# மதுகம பிரதேச சபை
# களுத்துறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 13 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஆகஸ்ட் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 சனவரி 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதுகம பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டம் 01 இன் மூலதனச் சொத்துக்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினப் பேரேட்டுக் கணக்கின் படி ரூபா 1,331,393 ஆன போதிலும் ரூபா 133,139 எனக் கருதப்பட்டு கணக்குகள் சமப்படுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 1,198,254 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நூலகப் புத்தகங்கள், நிலுவையான வீதவரி மற்றும் சம்பள மீள்நிரப்பற் கணக்கில் சரியாக மீதி குறிப்பிடப்பட்டிராமையால் பரீட்சை மீதியின் வரவுப் பக்கத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,997,649 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக் கணக்குகளின் மீதி ரூபா 212,096,456 தொகையானதுடன் மூலதனச் செலவினத்திற்கு வருமானத்தில் பங்களிப்புச் செய்யும் கணக்கு மீதி ரூபா 207,857,436 ஆகக் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் ஒக்டோபர் மாதத்தில் ரூபா 900,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த ஜேசீபீ இயந்திரத்தின் கிரயம் இனங்காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் பட்டியலில் காணப்படும் ரூபா 1,244,543 கூட்டுத்தொகையான 03 கடன்கொடுத்தோர் மீதி இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) 2012 ஆம் ஆண்டின் 3 ஆவலைகளுக்காகப் பெறப்பட்டிருந்த ரூபா 1,633,686 இற்கு உரிய எதிர்ப்பதிவுகள் இனங்காணப்பட முடியாதிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் கடன்பட்டோர் மீதியில் அவ் வேலைக்காக பெறவேண்டிய பணம் பதியப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது ஜேசீபீ இயந்திரமும் டிபர் இயந்திரங்கள் இரண்டும் கொள்வனவு செய்யப்படுகையில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,700,000 தொகைக்கும் ரூபா 9,000,000 தொகைக்கும் உரித்தான வரவுப் பதிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வேலை கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 5,262,022 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுவனவு, கொடுப்பனவு அல்லது இறுதி மீதி கணக்கீடு செய்யப்படாது பரீட்சை மீதியில் ரூபா 1,953,964 காண்பிக்கப்பட்டிருந்தது. வேலை கடன்பட்டோர்

கணக்கில் ஆரம்ப மீதியான ரூபா 9,284,256 தொகையும் இறுதி மீதியான ரூபா 27,456,517 தொகையும் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுவனவு, கொடுப்பனவு எதுவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடுகள் இன்மையால் ரூபா 209,131,760 தொகையான 4 நிலையான சொத்து மீதிகளும், உரிய பட்டோலைகள் இன்மையால் ரூபா 102,574 தொகையான ஆயுர்வேத களஞ்சிய மீதியும் ரூபா 77,345 தொகையான ஊழியர் இடர் மீதியும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொங்கல் கணக்கில் ரூபா 1,744,331 தொகையான செலவு மீதி காணப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 8,980,607 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,870,388 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 6,832 | 5,034 | 8,565 |
| (ii) | வாடகை | 4,814 | 4,281 | 2,526 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 302 | 301 | 24 |

### 2.2.2 விளம்பரப் பலகைக் கட்டணங்கள்

ஹொரவல பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 4 விளம்பரப் பலகைகளுக்கு உரித்தாக 2012 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 50,150 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2013 சனவரி 20 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நிலுவையான வீட்டு வாடகை

ஹொரவல உப அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தான வீட்டு வாடகைக் குடியிருப்பாளர்கள் 2 பேரிடமிருந்து 2007 ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்கள் முதல் அறவிடப்படாது வரும் தொகை ரூபா 12,239 ஆகும்.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலாச் சபையின் அங்கீகரித்த ஹொட்டேல், சிற்றுண்டிச் சாலை, விடுதி வருமானத்தில் 1% ஐ விஞ்சாத அளவிலான அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவிடப்பட வேண்டியதான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சுற்றுலாச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த மதுகம விடுதியில் இருந்து எந்த ஆண்டிலும் 1% வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | **ரூபா** |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 6,565,607 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,845,707 |

**2.2.6 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

2007 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருந்த 15 நிறுவகங்கள் தொடர்பாக மேலும் அந் நிறுவகங்கள் இயங்குகின்றனவா என்பது குறித்து உறுதிப்படுத்தி மீள அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய 46 நிறுவகங்கள் 2012 ஆம் ஆண்டின் போது சபையால் இனங்காணப்பட்டிருந்ததுடன் இதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்**

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 20,901,353 தொகையான செலவினங்கள் கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 9,608,537 தொகையான மீதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக முன்கொண்டு வரப்படும் ரூபா 96,000 தொகையான பெறவேண்டிய தனியார் பஸ் தரிப்பிடத்தின் வருமானமும் பெறவேண்டிய ரூபா 358,225 தொகையான வீதி விளக்கு மானியங்களைச் சேகரிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 யூலை 16 ஆம் திகதி சேவையை விட்டு விலகிச் சென்றுள்ள முகாமைத்துவ உதவியாளர் ஒருவரிடமிருந்து அச் சந்தர்ப்பத்தின் போது அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 90,539 தொகையான கடன் மீதி தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.8 கடை வாடகை**

(அ) 2011 ஏப்ரல் மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2011 மே மாதம் திறக்கப்பட்டிருந்த வெலிபென்ன வியாபாரத் தொகுதியில் உள்ள 12 கடைகளில் இருந்து கணக்காய்வுத் தினமாகிய 2013 பெப்ரவரி 22 ஆம் திகதி வரையிலும் 02 கடைகளிலிருந்து மாத்திரமே வரி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கல்மத்த வியாபாரத் தொகுதியின் 12 கடைகளில் 04 கடைகளிலிருந்து மாத்திரமே வரி செலுத்தப்பட்டிராததுடன் பயன்பாடின்றிக் காணப்பட்டது.

## 2.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் வீதிகளில் பதிவதற்காக கொங்கிரீட் கற்கள் உற்பத்தி செய்யப்படுவதற்காக 2010 மார்ச் 05 ஆம் திகதி ஹோமாகம நியூ மெரின் டெக் நிறுவகத்திலிருந்து ரூபா 130,862 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரம் கணக்காய்வுத் தினமாகிய 2013 பெப்ரவரி 22 ஆம் திகதி வரையிலும் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாது வேலைப் பகுதியில் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) வனப் பூங்காவை அபிவிருத்தி செய்வதற்காக 2007 ஆகஸ்ட் 23 ஆம் திகதி ரூபா 15,000 தொகைக்கு கைத்தாங்கியுடனான 10 கற் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2013 பெப்ரவரி 22 ஆம் திகதி கணக்காய்வுப் பரிசோதனையின் போது 5 கதிரைகள் அலுவலக வளாகத்தில் காணப்பட்டதுடன் எஞ்சிய 5 கதிரைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 203 மற்றும் 217 ஆம் பந்திகளின் பிரகாரம் சபையின் முழுமையான ஆதனங்கள் தொடர்பில் முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) அத்துமீறிய நிர்மாணிப்பு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்ட அத்துமீறிய நிர்மாணிப்பு அறிக்கையிடலுக்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிராமையால் இனங்காணப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்ட அத்துமீறிய நிர்மாணிப்புகள் எவை எனவும் அவை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பாகவும் இனங்காணப்பட முடியாதிருந்தது.

(ஈ) மதுகம பொது நூலகத்திலிருந்து 2011 முதல் எடுத்துச் சென்று மீள ஒப்படைக்கப்பட்டிராத ரூபா 19,830 பெறுமதியான 87 புத்தகங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டுடன் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு செயற்பாடுகளினதும் நிதிப் பெறுமதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதி உள்ளடக்கப்பட்டிராததுடன் வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வெலிபன்ன உப அலுவலகத்தால் சபரகமுவை அபிவிருத்தி வங்கியில் பேணப்பட்டு வரும் சேமிப்புக் கணக்கிற்கும் ஹொரவல உப அலுவலகத்தாலும் மக்கள் வங்கியால் பேணப்பட்டு வரும் நடைமுறைக் கணக்கிற்கு அவ் உப அலுவலகங்களின் வருமானம் நாளாந்தம் வைப்பிலிடப்பட வேண்டிய போதிலும் அவ் வங்கியால் அப் பணம் 1 மாதம் முதல் 3 மாதங்களுக்கு ஒரு முறை தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்படுவது அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஆகக் குறைந்த பணப் பெறுமதி கணக்கில் இருக்கும் வகையில் பணத்தை மாற்றப்படுவதற்கு அறிவுரைகள் வழங்கப்படாமையால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய காசு மீதி எவ்வித பயன்பாடும் இன்றி நிலவுவது கணக்கு பரீட்சிக்கப்படுகையில் கண்டறியப்பட்டது.

## 2.5 காணி ஏலவிற்பனை

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) இன் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள காணியை ஏலவிற்பனையிடுகையில் ஏலவிற்பனை செய்யப்படும் காணிகளின் விற்பனைப் பெறுமதியில் 1% வருமானம் சபையால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது சபையின் வருமானங்கள் நிர்வாகியால் தயாரிக்கப்பட்டிருந்த மொத்த மதிப்பீட்டில் 1% காசாக ரூபா 2,398,500 தொகை 9 காணிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் மொத்த மதிப்பீட்டிற்கும் சந்தை விற்பனைப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாடு இணக்கம் செய்யப்பட்டு எஞ்சிய தொகை பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1986 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆம் பிரிவின் (i) ஆம் பந்தியின் 22(1) இன் பிரகாரம் துணைப்பிரிவிடலுக்கு கருதப்படும் 1 ஹெக்டேயருக்கு அதிகரிக்கையில் வீதிக்காக ஒதுக்கப்பட்டதை அடுத்து விற்பனை செய்யப்பட்ட காணியின் அளவில் 10 % அளவு பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டு இது சபைக்கு பொறுப்பேற்கப்பட வேண்டிய போதிலும் ஏழு ஏலவிற்பனை செய்யப்பட்ட காணிகளில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளின் உறுதி கையேற்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது வசதிகளுக்காக சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த அக் காணித் துண்டுகளின் எல்லைகள் ஒதுக்கப்பட்டிராததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் பொது வசதிகளுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது அபிவிருத்தி செய்யப்படாது அவதானிக்கப்பட்டது.

**2.6 மின் உபகரணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மின் பொருட்கள் மற்றும் உபகரணக் கொள்வனவின் போது களஞ்சிய தேவைப்பாடு தொடர்பாக களஞ்சியத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் கோரலும் அத் தேவைப்பாடு தொடர்பான பரிந்துரைகளும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்புப் பேரேட்டு ஆய்வின் போது இருப்பு மீதிகள் போதியளவு இல்லாத போதிலும் விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(இ) ஒவ்வொரு நாள் மின் உபகரணங்களைப் பொருத்தும் வழி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மின் கம்ப இலக்கத்தின் படி தேவையான மின் உபகரணங்களின் அளவு விநியோகிக்கப்படாது ஒரு முறைக்கு 25, 30 படி விநியோகிக்கப்பட்டதுடன் எஞ்சிய பொருட்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி களஞ்சிய உத்தியோகத்தர்களுடன் மின்சாரப் பொருட்கள் 11 மாதிரிகளின் பௌதீக ஆய்வின் போது இருப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்கும் பௌதீக மீதிகளுக்கும் இடையே 4 இருப்பு வகைகளின் 96 அலகுகளின் பற்றாக்குறையும், 4 இருப்பு வகைகளின் 507 அலகுகளினதும் வயர் சுருளின் 5.3 மீட்டர் மிகையும் காணப்பட்டது.

(உ) சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் பொருத்தப்பட்டிருந்த மின் கம்பங்கள் இலக்கமிடப்பட்டிருக்கவில்லை.

## 2.7 மயானம்

சபை அதிகாரப்பகுதியில் ஏறத்தாழ இனங்காணப்பட்ட மயானங்களின் எண்ணிக்கை 56 அளவில் கண்டறியப்பட்டதுடன் இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) சபை அதிகாரப்பகுதியில் சபைக்குரிய மயானங்களின் எண்ணிக்கை எந்தளவு என்பது குறித்து சரியாக இனங்காணப்படுவதற்கு மெய்மையாய்வு செய்யப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 மார்ச் 22 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இதுவரையில் இனங்காணப்பட்டிருந்த மயான நிலங்களில் பெயர் பதிவேட்டில் பதியப்பட்டிருந்த போதிலும் காணியின் பெயர் உள்ள பிரதேசத்தின் விபரமும் அளவும் பதியப்பட்டிருக்கவில்லை.

(இ) மயான நிலங்களில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.8 ஒப்பந்தக் கட்டுப்பாடு

மகநெகும செயற்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த பொல்கஹவத்த செந்தநாயக்க மாவத்தை மீளமைப்பு I ஆம் கட்டத்தின் பிணைப்புக் கற்கள் பதிப்பதற்காக 2012 யூன் 01 ஆம் திகதி இத்தகொட மேற்கு, கிழக்கு ஒருங்கிணைந்த கமநல அமைப்புடன் ரூபா 500,000 தொகையான உடன்படிக்கையிடப்பட்ட தொகைக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நீளம் 343 அடி நீளமாகவும், அகலம் 8 அடியாகவும் உயரம் 6 அங்குலமாகவும் காணப்பட்டன.

சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தருடன் 2013 பெப்ரவரி 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதிக்காக பதிக்கப்பட்ட பிணைப்புக் கற்களின் இயலளவு சக்தி உள்ளமை ஆய்வறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பதிக்கப்பட்டிருந்த பிணைப்புக் கற்களின் ஆங்காங்கே சேதமுற்றிருந்தன.

(ஆ) மதிப்பீட்டின் 4 வேலை விடயங்களின் படி 6 அங்குல உயரத்திற்கு 1:2:4 (3/4) கலவையால் பக்கச் சுவர் கட்டுவது மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வீதியின் ஆரம்பத்தில் தென்பகுதிக் கட்டின் உயர் அங்குலம் 3 ½ ஆகக் காணப்பட்டது.

**2.9 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) 4 செலவின விடயங்களின் 12 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான வீச்சில் சாதகமான முரண் கண்டறியப்பட்டதுடன் 5 வருமான விடயங்கள் 26 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சில் பாதகமான முரண் கண்டறியப்பட்டது. இதன் பிரகாரம், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் படி 42 செலவின விடயங்களுக்காக ரூபா 16,847,000 கூட்டுத்தொகையான பணம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இதில் எவ்வித தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

**2.10 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய டபிள்யூபீ/எல்பீடீ/10/2008 ஆம் இலக்க கடிதத்தின் (ஈ) மற்றும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் பிரகாரம் செயற்பட வேண்டிய உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

(உ) பாதீடு